புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.Chinthamanisilks.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 நவம்பர் 14, 2019 புரட்சி 18 முழக்கம் 44 விலை: ரூ.3.00

## பாபர் மசூதி இடம் குறித்த உச்ச நீதிமன்ற தீர்ப்பு

# சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்புதானா?

*திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை :*

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஒருமித்த தீர்ப்பை வழங்கி விட்டது.

இந்தியாவில் அனேகமாக அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த தீர்ப்பை வரவேற்று விட்டன. ஆனால் இது சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்பு தானா? என்ற கேள்விகளையும் நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.

இஸ்லாமியர்கள் தரப்பில் எடுத்து வைத்த வாதங்கள் அத்தனையையும் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதும், இந்துத்துவாவாதிகள் முன்வைத்த வாதங்கள் பலவற்றையும் உச்சநீதிமன்றம் மறுத்திருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இராமர் கோயிலை இடித்து விட்டுதான் பாபர் மசூதி கட்டினார்கள் என்று சங்பரிவார்கள் பிரச்சாரம் செய்தன. அங்கு கோயிலை இடித்துவிட்டு பாபர் மசூதியை கட்டவில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது.

1949 ஆம் ஆண்டு வரை அங்கே தொழுகைகள் நடந்தன என்பதையும் உச்சநீதிமன்றம் உறுதிப் படுத்தியிருக்கிறது. அந்த மசூதியில் தொழுகைகள் ஏதும் நடக்கவே இல்லை என்று சங்பரிவாரங்கள் முன்வைத்த வாதத்தையும் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

450 ஆண்டு கால உரிமை முஸ்லிம்களுக்கு அந்த மசூதியில் இருக்கிறது என்பதை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தி இருக்கிறது.

450 ஆண்டுகாலம் ஒரு இடத்தில் மசூதி இஸ்லாமியர்களுக்கு இருந்தது, அதை அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்று சொன்னதற்கு பிறகு அவர்கள் நிலத்திற்கான உரிமை கோருவதற்கு உரிமை இல்லை என்ற தீர்ப்பை இப்போது உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கிறது. அது மட்டுமின்றி 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22, 23 தேதிகளில் மசூதிக்குள் அத்துமீறி நுழைந்து சில விஷமிகள் ராமன் சீதை சிலைகளை போட்டது சட்டவிரோதம் என்பதையும் உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1992 ஆம் ஆண்டு மசூதி இடிக்கப்பட்டதும் குற்றத்திற்கு உரிய நடவடிக்கை என்பதையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் முஸ்லிம்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்கள், அவை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டவைகள். சங்பரிவாரங்கள் எடுத்து வைத்த வாதங்களுக்கு எதிரான கருத்துக்கள்.

ஆனால் நிலம் தங்களுக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறி உச்ச நீதிமன்றம் அந்த இடத்தில் இஸ்லாமியர்களுக்கு உரிமை இல்லை என்று கூறிவிட்டது. இந்துக்களுக்கு சொந்தமான இடம் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கிறதா? இதற்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெளிவான விளக்கம் இல்லை மௌனம்தான் சாதிக்கிறது.

ஒப்பீட்டளவில் அது இந்துக்களுக்கு சொந்தம் என்கிற முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது என்று நீதிமன்றம் தீர்ப்பில் திரும்பத் திரும்ப கூறுகிறது. எப்படி இந்த முடிவுக்கு வந்திருக்கிறது என்பதற்கு தொல்லியல் துறை சமர்ப்பித்த அறிக்கை. அந்த அறிக்கையில், மசூதி இருந்த இடத்தில் பூமிக்கு கீழே நடத்தப்பட்ட ஆய்வுகளில் அங்கே இஸ்லாமிய கட்டுமானங்கள் ஏதும் இருந்ததற்கான சான்றுகள் இல்லை என்று கூறி இருப்பதை ஒரு காரணமாக காட்டுகிறது.

இரண்டாவதாக அங்கேதான் ராமன் பிறந்தான் என்கிற ஒட்டுமொத்த இந்துக்களின் நம்பிக்கையை காரணமாக காட்டுகிறது. ஒட்டு மொத்த இந்துக்களின் நம்பிக்கை என்று சங் பரிவாரங்கள் கூறலாம்; உச்சநீதிமன்றம் கூறுவதுதான் வியப்பாக இருக்கிறது. ஒட்டுமொத்த இந்துக்கள் ராமன் அங்கு தான் பிறந்தான் என்ற நம்பிக்கையை காரணம் காட்டி மசூதி இருந்த இடத்தில் கோயிலைக் கட்டிக் கொள்ளலாம் என்று நம்பிக்கையை இந்துக்களுக்கு சாதகமாக பயன்படுத்திய உச்சநீதிமன்றம், இஸ்லாமியர்களின் நம்பிக்கையை அவர்களை பாபர் மசூதி பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு பயன்படுத்தியிருக்கிறது. அதாவது தொழுகையை நடத்துவதற்கு மசூதிதான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை எனவே வேறு இடத்தில் மசூதி கட்டி அவர்கள் தொழுகை நடத்தலாம் என்று கூறுகிறது. ஆக இஸ்லாமியர்களுடைய நம்பிக்கையை அந்த இடத்திலிருந்து இஸ்லாமியர்களை வெளியேற்று வதற்கும், இந்துக்களின் நம்பிக்கையை மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமன் கோயில் கட்டுவதற்காகவும் உச்சநீதிமன்றம் இப்போது பயன்படுத்தி இருக்கிறது.

யார் இந்த மசூதியை இடித்தார்களோ, அவர்களே ஒரு அறக்கட்டளையை நிறுவிக் கொண்டு இராமர் கோயிலை கட்டிக்கொள்ளலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. இராமர் கோயில் கட்ட வேண்டும் என்பது பற்றி கோரிக்கை எதுவும் இந்த வழக்கு மனுவில் இல்லை. ஆனால் உச்சநீதிமன்றம் இராமர் கோயில் கட்டுவதற்கும் ஏற்பாடுகளை செய்திருக்கிறது.

ஒருவேளை மசூதி இடிக்கப்படாமல் மசூதி அங்கு இருந்திருக்கும் என்று சொன்னால் இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு வந்திருக்குமா என்ற கேள்வியை நாம் எழுப்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது. சட்ட விரோதமாக மசூதி இடிக்கப்பட்ட இடம் இப்போது ‘இராமனு’க்கு சட்டபூர்வ கோயிலை எழுப்புவதற்கு வழி வகுத்திருக்கிறது.

இது சட்டத்தின் முன் சரியான தீர்ப்புதானா என்ற கேள்வியை வரலாறு எதிர்காலத்தில் நிச்சயம் எழுப்பத்தான் செய்யும். ●

# உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்ட தொல்பொருள் ஆய்வு முறையானதா?

உச்சநீதிமன்றம் பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்திருக்கலாம் என்பதற்கு தொல்லியல் துறை அறிக்கையை ஒரு ஆவணமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. தொல்லியல் அறிக்கை ஏற்கனவே ஆய்வாளர்களால் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிறந்த வரலாற்று ஆய்வாளரும் பல வரலாற்று நூல்களை எழுதியவருமான டி.என். ஜா, இந்த தொல்பொருள் ஆய்வின் நம்பகத் தன்மைக் குறித்து ‘தி வயர்’ இணைய ஏட்டுக்கு ஏற்கனவே பேட்டி அளித்திருக்கிறார். அந்தப் பேட்டியில் அவர் எழுப்பியுள்ள கேள்விகள் முக்கியமானவை.

அயோத்தியில் இந்த அகழ்வாய்வை நடத்தியபோது தொல்பொருள் துறையின் இயக்குனராக இருந்தவர் பி.பி. லால். அவர் வெளியிட்ட முதல் ஆய்வு அ றிக்கையில் பாபர் மசூதிக்கு கீழே நடத்தப்பட்ட அகழ்வாய்வில் “தூண் தளங்கள்” இருந்ததாக எந்தக் குறிப்பும் இல்லை. (கோயில் இருந்திருக்கலாம் என்பதற்கு இந்தத் ‘தூண் தளங்களே’ ஆதாரம் என்று சங்பரிவாரங்கள் கூறி வந்தன)

பிறகு 1989 ஆம் ஆண்டில் ‘இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தில்’ (அய்.சி.எச்.ஆர்.) இது குறித்து அவர் ஒரு கட்டுரை சமர்ப்பித்தார். அந்தக் கட்டுரையிலும் ‘தூண் தளங்கள்’ பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அதற்குப் பிறகு இராமாயணம் குறித்து அவர் நிகழ்த்திய உரையிலும் இது குறித்து பேசவில்லை. அதற்குப் பிறகு தான் லால் தனது கருத்துகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினார்.

1990 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். இது குறித்து ஆய்வு என்ற பெயரில் வெளியிட்ட ஒரு நூலில் மசூதிக்கு அருகே ‘தூண் தளங்கள்’ தென்பட்டதாக லால் எழுதினார். அகழ்வராய்ச்சி நடந்து முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு லால் வெளியிட்ட கருத்து இது. ஆய்வாளர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வது உண்டு. அதற்கு நீண்ட ஆய்வுகளும் காலமும் தேவைப்படும். ஆனால் ‘அதிவேகத்தில்’ ஒரே ஆண்டில் தனது கருத்தை மாற்றிக் கொண்டார், லால்.

லால், மற்றொரு கருத்தையும் அப்போது கூறினார். இஸ்லாமியர் கட்டிட மரபுக்கு தொடர்பில்லாத 14 கருப்பு கல்தூண்கள் மசூதி நுழை வாயில் பகுதியில் கண்டறியப்பட்டதாகக் கூறினார். இது குறித்து சந்தேகித்த ஆய்வாளர்கள் தனியே ஆய்வு நடத்துவதற்கு அனுமதி கேட்டனர். ஆனால் தொல் பொருள் ஆய்வுத் துறை அனுமதிக்கவில்லை.

தொல்பொருள் துறையின் ஆய்வறிக்கையை பல ஆய்வாளர்கள் நிராகரித்துவிட்டனர். முதலில் இந்த ஆய்வு இதற்காக நிர்ணயிக்கப்பட்ட அறிவியல் முறையில் நடத்தப்படவில்லை. இரண்டாவதாக மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்தது என்று ஏற்கனவே முடிவு செய்து கொண்டு நடத்தப்பட்ட ஆய்வு என்று ஆய்வாளர்கள் கூறினார்கள்.

சுப்ரியா வர்மா, ஜெயாமேனன் என்ற இரண்டு தொல்பொருள் ஆய்வாளர்கள் 2010 செப்டம்பரில் ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ இதழில் இந்த ஆய்வின் குளறுபடிகள் குறித்து விரிவான கட்டுரை ஒன்றை எழுதினார்கள். ஆய்வாளர்கள் அரசு அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் அவர்கள் நேர்மையான முறையில் ஆய்வை நடத்த முடியவில்லை என அவர்கள் கூறியதோடு, தொல்பொருள் ஆய்வு நடத்த விரும்பும் எவரும் துறையின் அனுமதி பெற வேண்டும் என்று விதி இருப்பதால் எந்த ஆய்வாளரும் அரசை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே பலரும் இந்த ஆய்வில் நடந்த முறைகேடுகளைக் கண்டிக்க முன் வரவில்லை” என்றும் அந்த கட்டுரையில் சுட்டிக் காட்டினர்.

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர் வர்மா, மசூதிக்கு கீழே கோயில் இருந்தது என்பதற்கு முன் வைக்கப்படும் சான்றுகளை உறுதியாக மறுத்தார். அங்கே மசூதி இருந்ததற்கான தடயங்கள்தான் இருந்தன என்றும் கூறினார்.

இந்த அகழ்வாய்வு - அறிக்கை விலங்குகளின் எலும்புகள், உடைந்த ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டதைக் குறிப்பிடாமல் மறைத்து விட்டது என்றும் ஜா குற்றம்சாட்டினார்.

இந்த தொல்பொருள் ஆய்வு அறிக்கையைத் தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கிடைத்துள்ள அடிப்படையான ஆவணம், என்று நீதிமன்றம் கூறுகிறது.

# உச்சநீதிமன்றத் தீர்ப்பு : 'இந்து' ஆங்கில ஏடு எழுப்பும் கேள்விகள்

*அயோத்திப் பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை பொது அமைதி கருதி வரவேற்றாலும், தீர்ப்பில் உள்ள முரண்பாடுகளை 'இந்து' ஆங்கில நாளேட்டின் (நவம். 11, 2019) தலையங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. அந்த ஏடு எழுப்பியுள்ள கேள்விகளின் சுருக்கமான தமிழ் வடிவம்:*

- 1949ஆம் ஆண்டு மசூதிக்குள் இராமன், சீதை சிலைகள் போடப்பட்டதையும் மசூதியை இடித்ததையும் சட்ட விரோத நடவடிக்கைகளாக தீர்ப்பு கூறியிருப்பது மதச்சார்பின்மை கொள்கைக்கு உளவியலாக வலுசேர்க்கிறது என்றாலும் உச்சநீதிமன்றம் இராமர் கோயில் கட்டுவதற்கு அனுமதித்ததோடு இந்துக்களுக்கே அந்த இடம் உரிமையானது என்று தீர்ப்பளித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது. மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்தாலும் தீர்ப்பு அதை நியாயப்படுத்தியிருக்கிறது.
- நிலத்துக்கான உரிமை கோரி இரண்டு சமூகங்கள் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளதை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிறது. வழக்கில் இணைத்துக் கொண்ட ஒரு சமூகம், திட்டமிட்டு வன்முறைகளை உருவாக்கியது. மசூதியை இடித்தது விசுவ இந்து பரிஷத். இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கியது பாரதிய ஜனதா. இந்த வன்முறையை அரங்கேற்றிய பிரிவு 1989ஆம் ஆண்டு 'குழந்தை இராமன்' சார்பில் ஒரு மனுதாரராக இந்த வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டது. மனுதாரரில் ஒரு தரப்பு வன்முறையைக் கையில் எடுத்தது என்பதும் பிறகு வழக்கில் இணைத்துக் கொண்டது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.
- உச்சநீதிமன்றம் இறுதியாக முடிவுக்கு வந்த கருத்துகளோடு தீர்ப்பு உடன்படாமல் முரண்பட்டு நிற்கிறது. அகழாய்வு சான்றுகளை முக்கிய ஆதாரமாகக் காட்டுகிறது உச்சநீதிமன்றம்., மசூதி இடிக்கப்பட்டதால்தான் அப்பகுதியில் அகழாய்வை நடத்த முடிந்திருக்கிறது என்பதையும் உச்சநீதிமன்றம் ஒப்புக் கொள்கிறது. மசூதியை இடித்தவர்களுக்கு அதன் வழியாகக் கிடைத்த சான்று ஆதாரத்தை நீதிமன்றம் சாதகமாக்கியிருக்கிறது. மசூதியை இடித்தவர்களுக்குக் கிடைத்த பயன் இது.
- அகழாய்வு அறிக்கை 12ஆம் நூற்றாண்டில் பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்திருக்கும் அடையாளங்கள் இருப்பதாகக் கூறுகிறது. ஆனால் கோயிலை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டது என்பதற்கு சான்று ஏதும் இல்லை. ஆனால், 16ஆம் நூற்றாண்டில் மசூதி வருகிறது. இடையில் 4 நூற்றாண்டுகளில் அங்கே என்ன இருந்தது என்பதற்கு சான்றுகள் ஏதும் இல்லை.
- 1857ஆம் ஆண்டிலிருந்து 1949 வரை மசூதியில் தொழுகை நடந்தது என்பதை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம் தொழுகைக்கு உரிய இடமாக அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு, அவர்களுக்கு என்ன "சலுகை அல்லது உரிமைகளை" வழங்கியிருக்கிறது?
- மசூதிக்குள் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தான் 'இராம ஜென்ம பூமி' என்று இந்து தரப்பு உரிமை கோரியது. மசூதியின் உட்சுவர் பகுதி, வெளிச் சுவர் பகுதி என்ற இரண்டு பகுதிகளில் வெளிச் சுவர் பகுதி இஸ்லாமியர்கள் உரிமையில் இருந்தது என்பதை ஒப்புக் கொண்ட உச்சநீதிமன்றம் தீர்ப்பின் இரண்டு பகுதிகளையும் இந்துக்களுக்கு உரிமையாக்கியது சரியா?
- நிலம் தங்களுக்கு மட்டுமே உரிமையானது என்று இஸ்லாமியர் தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம் நிலத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே உரிமையுடைய இந்து தரப்புக்கு முழு நிலப் பரப்புக்குமான உரிமை வழங்கப்பட்டிருப்பது சரியா?
- மசூதி கட்டப்படாத 1857க்கு முன்பே அப்பகுதியில் 'இந்து' வழிபாடு நடந்திருக்கிறது என்றும், 1857க்குப் பிறகே இஸ்லாமியர் 'தொழுகை' நடத்தியிருக்கிறார்கள் என்றும் கூறும் உச்சநீதிமன்றம் ஒரு வரலாற்று உண்மையை மறந்து விட்டது. 1857ஆம் ஆண்டில் மசூதியின் வெளிப்புறத்தில் தொழுகை நடத்தும் உரிமைக்கும் வழிபாடு நடத்தும் உரிமைக்கும் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் உருவாகி பெரும் கலவரம் வெடித்தது. அப்போது பிரிட்டிஷ் நிர்வாகம், மசூதி வெளிச்சுவர் பகுதியில் ஒரு தண்ட வாளத்தைப் போட்டு இரண்டாகப் பிரித்து, இந்துக்கள் வழிபாட்டுக்கு தனி இடம் ஒதுக்கியது என்பது வரலாறு. இந்து வழிபாடு மட்டுமே நடந்தது என்று உச்சநீதிமன்றம் கூறுவது வரலாற்று நிகழ்வுக்கு முரணாக இருக்கிறது.
- ஒப்பீட்டு அளவில் இந்துக்களுக்கே சாதகமான வாய்ப்புகள் என்ற முடிவுக்கு உச்சநீதிமன்றம் வரும்போது 'சாதகமான வாய்ப்புகளுக்கு' சிவில் சட்டங்களின் நெறிமுறையில் ஒரு சார்புக்கு மட்டுமே உரிமையானது என்ற முடிவுக்கு வர முடியுமா?
- இராமன் கோயில் பிரச்சினையை முன் வைத்து 1992 முதல் நாட்டில் மதக் கலவரங்களையும் வன்முறைகளையும் உருவாக்கி கோயில் கட்டும் இயக்கம் நாட்டில் நடத்தப்பட்டது. இதற்கு முஸ்லிம் தரப்பில் 'குண்டு வெடிப்பு' போன்ற எதிர்வினைகளும் நடந்தன. இந்த நிலையில் மசூதியை இடித்து கலவரத்தை உருவாக்க முயன்றவர்கள் மீதான வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் உரிய தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். புதிய இந்தியா குறித்து பேசும் பிரதமர் மோடி, இராமர் கோயில் கட்டும் அறக்கட்டளையில் விசுவ இந்து பரிஷத்தினருக்கு இடமளிக்கக் கூடாது.

*இந்துக்களின் நம்பிக்கையை மதித்து உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு, எதிர்காலத்தில் சட்டத்தைப் புறந்தள்ளி நம்பிக்கையை யாரும் முன்னிறுத்துவதாக இருந்து விடவும் கூடாது.*

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.11.2019**

# பார்ப்பன 'தினமலர்' கூறுகிறது

## இராமர் கோயில் பிரச்சினைதான் பா.ஜ.க. வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது

இராமர் கோயில் பிரச்சினைதான் பா.ஜ.க. வளர்ச்சிக்கும் அதுஅதிகாரத்தைக் கைப்பற்று வதற்கும் உதவியது என்று 'தினமலர்' நாளேடு எழுதியுள்ளது.

அயோத்தியில் உள்ள இராம ஜென்ம பூமி விவகாரம், மத்தியில் தற்போது ஆளும் பா.ஜ.க.,வுக்கு, 1996 முதலே, ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலின் போதும் முக்கிய பிரச்னையாக அமைந்திருந்தது. மேலும், ஒவ்வொரு தேர்தலிலும், இந்தப் பிரச்னையை முன்வைத்து செய்த பிரச்சாரங்களால், அந்தக் கட்சி படிப்படியாக வளர்ச்சியைக் கண்டு வந்துள்ளது.

'அயோத்தியில் இராமர் கோவில் கட்ட வேண்டும்' என, பா.ஜ.க.,வின் முன்னாள் தலைவர் எல்.கே. அத்வானி உருவாக்கிய இயக்கம், 'கோவில் கட்ட வேண்டும்' என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பில் முடிந்துள்ளது.

இந்த இடைப்பட்ட காலங்களில், இந்த விவகாரம், பா.ஜ.க.,வுக்கு தேர்தல்களில் மிகப் பெரிய உதவியை செய்துள்ளது. கடந்த, 1980களின் இறுதியில் மற்றும் 1990களின் துவக்கத்தில், ஒரு சிறிய கட்சி என்ற நிலையில் இருந்து, மிகவும் முக்கியமான கட்சியாக பா.ஜ.க., உருவெடுக்க ராமர் கோவில் உதவியுள்ளது. கடந்த, இரண்டு தேர்தல்களில் தான், இந்தப் பிரச்னையை முன் வைக்காமல், பிரதமர் நரேந்திர மோடி வேறு அம்சங்களை குறிப்பிட்டு பிரசாரம் செய்து வென்று உள்ளார். ஆனாலும், பா.ஜ.க.,வின் நாடி நரம்பெல்லாம் விரிந்து பரவியுள்ளது, ராமர் கோவில் விவகாரம்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்ட வேண்டும் என்று, 19ஆம் நூற்றாண்டிலேயே பேசப்பட்டது. ஆனால், அது ஒரு இயக்கமாக மாறியது, 1980களில்தான். 1980இல், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி உள்ளிட்டோர் இணைந்து பா.ஜ.க.,வை துவங்கினர். 1984இல் காங்கிரசைச் சேர்ந்த பிரதமர் இந்திரா படுகொலைக்குப் பிறகு நடந்த தேர்தலில், பா.ஜ.க., போட்டியிட்டது.

ஆனால், வாஜ்பாய் மற்றும் அத்வானி மட்டும் வென்றனர். அந்தக் கட்சியின் ஓட்டு சதவீதம், ஒற்றை இலக்கத்திலேயே இருந்தது. அந்தத் தேர்தலில், 415 தொகுதிகளில், 48 சதவீத ஓட்டுகளுடன், காங்கிரஸ் வென்ற சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை. கடந்த, 1989இல் நடந்த தேர்தலில், பா.ஜ.க., 85 தொகுதிகளில் வென்றது. வி.பி.சிங் தலைமையிலான, தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு தெரிவித்தது. மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த வி.பி.சிங் முயன்றதால், கூட்டணியில் இருந்து பா.ஜ.க., வெளியேறியது.

அந்த நேரத்தில் தான், அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்காக, அத்வானி, ரத யாத்திரை மேற் கொண்டார். அது பெரிய இயக்கமாக மாறியது. மண்டல் கமிஷன் பிரச்னையைவிட, ராமர் கோவில் பிரச்னையே நாடு முழுவதும் விவாதிக்கப் பட்டது. கடந்த, 1992, டிச., 6இல், இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட கரசேவகர்கள், அயோத்தியில் கூடினர். அப்போது பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதன்பிறகு, பா.ஜ.க.,வின் வளர்ச்சி வேகமாக இருந்தது. கடந்த, 1996இல் நடந்த தேர்தலில், 161 தொகுதிகளில் வென்று தனிப் பெரும் கட்சியாக பா.ஜ.க., உயர்ந்தது. ஆனால், பார்லிமென்டில் பலத்தை நிரூபிக்க முடியாமல், வாஜ்பாய் தலைமையிலான அரசு, 13 நாட்களில் கவிழ்ந்தது.

அதன் பிறகு, 1999இல் நடந்த தேர்தலில், 182 இடங்களில் வென்று, பா.ஜ.க., மீண்டும் தனிப்பெரும் கட்சியாக விளங்கியது. வாஜ்பாய் தலைமையிலான அரசு, முழு பதவிக்காலத்தை நிறைவு செய்தது. ஆனால், கூட்டணிக் கட்சிகளின் எதிர்ப்பால், ராமர் கோவில் கட்டும் விவகாரத்தை பா.ஜ.க.,வால் எழுப்ப முடியவில்லை. கடந்த, 2004 மற்றும் 2009இல் நடந்த தேர்தல்களில், காங்.,கிடம், பா.ஜ.க., தோல்வி அடைந்தது. ஆனாலும், அந்தத் தேர்தல்களிலும், அயோத்தி ராமர் கோவில் விவகாரமே, பா.ஜ.க.,வின் முக்கிய பிரசார பிரச்னையாக இருந்தது.

கடந்த, 2014இல், காங்கிரஸ்க்கு எதிரான மனநிலை நாடு முழுவதும் இருந்தது. அப்போது மோடி அலையால், பா.ஜ., அபாரமாக வென்று ஆட்சி அமைத்தது. இந்தாண்டு நடந்த தேர்தலிலும், மோடி அரசின் செயல்பாடுகள் குறித்தே முக்கியமான பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால், ராமர் கோவில் என்பது, பா.ஜ.க.,வின் அரசியல் அடிநாதமாக தொடர்ந்து இருந்து வந்துள்ளது - என்று பா.ஜ.க. ஆதரவு பார்ப்பன ஏடு 'தினமலர்' செய்தி வெளியிட்டுள்ளது.

# ஆதாரங்களுடன் கொளத்தூர் மணி விளக்கம்

# தமிழ்நாட்டு கல்வி வளர்ச்சியை முடக்குகிறது மோடி ஆட்சியின் கல்விக் கொள்கை

***தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை முடக்குவதாகவே பாஜ.க. ஆட்சி கல்விக் கொள்கை இருப்பதை ஆதாரங்களுடன் விளக்கினார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

ஆரியர்கள் வடக்கில்தான் படையெடுத்து வந்தார்கள். ஆனால் தெற்கில் பண்பாட்டுப் படையெடுப்பைத்தான் நடத்தினார்கள். அந்த பண்பாட்டு படையெடுப்புக்கு எதிர்ப்பாக பண்பாட்டுப் புரட்சியை பெரியார் செய்தார். பார்ப்பன எதிர்ப்பு என்பது பண்பாட்டு எதிர்ப்பு. பார்ப்பன பண்பாடு என்பது ஒவ்வொரு துறைதோறும் நம்மை அடிமைப்படுத்திய, கேவலப்படுத்திய பண்பாடு. நாம் கட்டிய கோயிலில் நமக்கு வழிபாடு நடத்தக்கூட உரிமை இல்லை என்று சொன்னார்கள். பெரியார் நடத்திய கடைசிப் போராட்டம் இதற்காகத்தான். பெரியார் நடத்திய போராட்டங்களில் நாத்திகப் போராட்டங்கள் இரண்டு மட்டும்தான். விநாயகர் சிலையை உடைத்தார், இராமர் படத்தை எரித்தார் என்ற இரண்டைத் தவிர வேறெதுவும் இல்லை. இந்தி எதிர்ப்பு, இட ஒதுக்கீடு என ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கான போராட்டத்தைத்தான் பெரியார் நடத்தினார்.

1926ஆம் ஆண்டு மதுரையில் பார்ப்பனரல்லாதோர் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில், இந்துக்கள் என்று சொல்லப்படும் சகல சமூகத்தினருக்கும் கோயில் பிரவேசத்திலும், பூஜையிலும், தொழுகையிலும் சம உரிமை வேண்டும் என்று தீர்மானம் போட்டார். 1973ஆம் ஆண்டில் பெரியார் இறுதியாக அறிவித்த போராட்டமும் அதுதான். அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகராகும் உரிமை உண்டு என்று போராட்டத்தை நடத்தினார். அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகர் ஆக்கு என்று கோரிக்கை வைக்கவில்லை, உரிமை உண்டு, ஏற்றுக்கொள் என்று போராடினார். கடவுள் நம்பிக்கை உடைய, உரிய ஆகம பயிற்சி உடையவர்களை அர்ச்சகராக்கு என்று பெரியார் சொன்னார். கலைஞர் உடனடியாக சட்டம் இயற்றியதால் போராட்டத்தை பெரியார் ஒத்தி வைத்தார். ஆனால் அதை நீதிமன்றம் சென்று தடுத்துவிட்டார்கள்.

அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகர் ஆக்குவது பற்றி நீதிபதி மகாராசன் தலைமையில் அரசு ஒரு குழுவை அமைத்தது. அவர் ஒரு சைவ அறிஞர். அதிக உடல் பருமன் உள்ளவன் அர்ச்சகராக முடியாது என ஆகமத்தில் உள்ளது என்று மகாரசன் எழுதியுள்ளார். பல் உடைந்தவன், சிவந்த தலை உடையவன் அர்ச்சகராக முடியாது என்றெல்லாம் ஆகமத்தில் இருக்கிறது என எழுதினார். லாகூர் மாநாட்டிற்காக அம்பேத்கர் தயாரித்த உரையில்கூட அர்ச்சகர் தகுதி பற்றி கூறியிருந்தார். குறிப்பிட்ட பட்டயத்தில் தேர்ச்சி பெற்றால் மட்டும்தான் இனிமேல் அர்ச்சகராக நியமிக்க வேண்டும், இப்போது இருப்பவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்ச்சி அடைந்தால் மட்டும் அர்ச்சகர்களாக நீடிக்க வேண்டும் என அம்பேத்கர் கூறினார். இதையெல்லாம் கடைபிடித்தால் முக்கால்வாசி பார்ப்பனர்கள் அர்ச்சகராக இருக்கமுடியாது.

தீர்க்கதரிசி என்று பலரை சொல்கிறார்கள். பெரியாரைத்தான் தீர்க்கதரிசி என்று சொல்ல வேண்டும். இடஒதுக்கீட்டின் வழியாக கல்வி பெறுவோம், அரசுப் பணிகளைப் பெறுவோம். ஆனால் நீதிமன்றத்தில் பார்ப்பான் அமர்ந்திருப்பான் என்று சொன்னார். உச்சநீதிமன்றத்தில் 36 பேரில் 34 பேர் பார்ப்பனர்கள்தான் உள்ளனர். உச்சநீதிமன்றம் சொன்னால் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா, அதற்கு மேல் ஒரு நீதிமன்றம் இல்லை அவ்வளவுதான், அதனால் ஏற்றுக் கொள்கிறோம் என்று இடஒதுக்கீட்டு போராட்டத்தின்போது பெரியார் சொன்னார்.

‘என்ன உச்சநீதிமன்றம் சொல்லிடுச்சுனா ஏற்றுக் கொள்ள வேண்டுமா? உலகத்திலேயே அவன் தான் பெரிய அறிவாளியா? அதற்கு மேல் வேறு நீதிமன்றம் இல்லை. அதனால் வேற வழி இல்லாமல் ஏற்றுக் கொள்கிறோம்’ என்று பெரியார் வேடிக்கையாகச் சொன்னார். ஆந்திராவில் துறவியானான் ஒருத்தன், சன்னியாசியாகப் போனான். உச்சநீதிமன்றம் கூறியது சூத்திரன் சன்னியாசியாக முடியாது என்று. எதுவுமே வேண்டாமென்று (சன்னியாசியாக) கூட போக முடியாது. 1996இல் ஒரு வழக்கில், திருமணமான பெண், மணவிலக்கு சட்டப்படி பெறாமல் இன்னொருவரை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு சொத்தில் பங்கு உண்டா இல்லையா என்பது தான் வழக்கு. கீழமை நீதிமன்றம் கூறியது



**ஏதோ பெரியார் தான் சூத்திரன், சூத்திரன் என்று சொல்லிக் கொண்டுள்ளார் என்று சொன்னார்கள். ஆனால் 1996 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பிலேயே சூத்திரன் என்று கூறுகிறது.**

சொத்தில் பங்கு உண்டு என்று. ஏனென்றால் பள்ளி சான்றிதழ்களில் இவர்தான் அப்பா என்று உள்ளது. உயர்நீதிமன்றம், சட்டப்படி மணவிலக்கு பெறாமல் செய்த திருமணம் செல்லாது. எனவே சொத்தில் பங்கில்லை என்று கூறியது.

அடுத்து உச்சநீதிமன்றம் சென்றார்கள். உச்சநீதிமன்றம் பங்கு உண்டு என்று கூறியது. அது மட்டுமல்லாமல், இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் ஒன்றை கவனிக்கத் தவறிவிட்டது. இந்த வழக்காடிகள் அனைவரும் சூத்திரர்கள், சூத்திரர்களுக்கு மனைவியும், வைப்பாட்டியும் ஒன்றுதான் எனவே சொத்தில் பங்கு உண்டு என்று கூறியது உச்சநீதிமன்றம். ஏதோ பெரியார் தான் சூத்திரன், சூத்திரன் என்று சொல்லிக்கொண்டுள்ளார் என்று சொன்னார்கள். ஆனால் 1996இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பில் சூத்திரன் என்று கூறுகிறது. எம்.கோவிந்தராஜ் எதிர் முனுசாமி கவுண்டர் என்ற வழக்கு. திருப்பத்தூரைச் சேர்ந்த பெருமாம்பட்டி கூளைக் கவுண்டரை திருமணம் செய்த பாப்பம்மாள், மணவிலக்குப் பெறாமல் முனுசாமி கவுண்டரை திருமணம் செய்து கொள்கிறார். இந்த வழக்கில் தான் உச்சநீதிமன்றம் இவர்களெல்லாம் சூத்திரர்கள் என்று தீர்ப்பு சொன்னது. பெரியார் தான் சொன்னார், ‘உங்களையெல்லாம் சாஸ்திரத்தில், சட்டத்தில், அனுபவத்தில் சூத்திரன் என்று எழுதி வைத்திருக்கிறானே உங்களுக்கெல்லாம் மானமில்லையா என்று கேட்டார்’. பெரியார், ஜாதி ஒழிப்பும், தனித் தமிழ்நாடு விடுதலையும் என் உயிரின் மேலான இரு கொள்கைகள் என்று அப்போது கூறினார். நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். எப்போதும் தமிழ்நாட்டில் பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இப்போது வேறு மாநிலத்தவர்களும் பேசுகிறார்கள். இந்தியை எதிர்த்தார் பெரியார் அதனால் தான் வேலை கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். புதிய கல்விக் கொள்கையில் சொல்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள் நிறைய கல்விக் குழுக்களை அமைத்தார்கள். டாக்டர் லட்சுமண சாமி முதலியார் கல்விக் குழு, டாக்டர் இராதா கிருஷ்ணன் கல்விக் குழு, இவர்கள் துணைவேந்தராக, பேராசிரியராக இருந்தவர்கள். யஷ்பால், கோத்தாரி குழுக்கள் இவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு துணைத் தலைவராக இருந்தவர்கள். ஆச்சாரியா இராமமூர்த்தி இவர் காந்தியக் கல்வியாளர். இவையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கல்வியாளர்களைக் கொண்டு நியமித்த கல்விக் குழுக்கள். பாஜக போட்ட கல்வி குழுவில் போட்ட “கல்வியாளர்கள்” யார்? தொழிலதிபர்களைக் கொண்ட கல்வியாளர்கள் தான். வாஜ்பாய் ஒரு குழுவை நியமித்தார், அம்பானி-பிர்லா கல்விக் குழு. இவர்கள் தான் கல்வியைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்த குழு தான் அந்நிய நாட்டு பல்கலைக் கழகங்கள் வேண்டும், பல்கலைக் கழகங்களில் அரசியல் நடவடிக்கைகள் கூடாது என்று பரிந்துரைத்தது. அதனால் தான் ரோகித் வெமுலாவை இழந்தோம், கன்னையா குமார் மேல் தேச விரோத சட்டம் பாய்ந்தது

மோடி ஆட்சியில் இப்போது இரண்டு குழுவை அமைத்தார்கள். போன முறை மோடி ஆட்சியில் இருந்த போது டி.எஸ்.ஆர். சுப்ரமணியம். அவர் அரசுத் துறையில் அமைச்சக செயலாளராக இருந்தவர். அந்தக் குழுவில் ராஜ்புத் என்ற ஒரே ஒரு கல்வியாளர் இருந்தார். அவர் ஆர்எஸ்.எஸ் கல்வியாளர். மிகவும் வித்தியாசமான கல்வியாளர். கோமியத்தில் என்னென்ன சத்துக்கள் இருக்கிறதென்று இப்போது ஆய்வு செய்து கொண்டுள்ளார்கள். சரஸ்வதி நதி எங்கே போனது என்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறார். மகாபாரதப் போர் எப்போது நடந்தது என்று வரலாற்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் தான் இப்போது கல்வியாளர்கள். இவர் தான் அந்தக் குழுவின் தலைவர். பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே சொன்னார், இந்த நாட்டிற்கு கல்வி கொடுக்க வேண்டும். இந்த நாட்டின் வரலாறு என்பது 100அடி அரசர்கள் 1000 ஆண்டுகள் ஆண்டதாக உள்ளதை அரசர்களின் வரலாறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் பூகோளம் என்பது பாலில் கடல் இருந்தது என்பதாக உள்ளது. இங்குள்ள அறநெறி (ethics) என்பது கழுதையைத் தொட்டால் என்ன பிராயச்சித்தம் என்று சொல்லிக் கொடுக்கிறது.

இப்படி கல்வி இருந்தால் இந்த நாடு எப்படி முன்னேறும் என்று மெக்காலே எழுதினார். இப்போதும் அதைத்தான் கல்வி என்று சொல்லிக் கொண்டுள்ளனர். அதிகாரி டி.எஸ்.ஆர். சுப்ரமணியம் குழுவுக்குப் பிறகு இஸ்ரோ விஞ்ஞானி கஸ்தூரி ரங்கன் கல்விக் குழுவின் தலைவர். இஸ்ரோ விஞ்ஞானிக்கும் கல்விக்கும் என்ன சம்மந்தம்? இவர் கல்விக் கொள்கை அறிக்கையைத் தருகிறார். அந்த அறிக்கையின் இரண்டு வரிகளைப் படித்தாலே போதும் கல்விக் கொள்கையில் என்ன இருக்கிறதென்று தெரிந்துவிடும். அவர் அந்த அறிக்கையில் ஓரிடத்தில் சொல்கிறார், ‘இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து பல பத்தாண்டுகளாக, அனைவருக்குமான கல்வி, சமமான கல்வி என்று பேசிக் கொண்டு கெடுவாய்ப்பாக தரமான கல்வியை கொடுக்கத் தவறிவிட்டோம்’ என்று அவர் எழுதியிருக்கிறார்.

எனவே ‘அனைவருக்குமான கல்வி, சமமான கல்வி என்று பேசினோமே தவிர தரமான கல்வியைப் பற்றி இதுவரை பேசவேயில்லை’ என்று இனி தரமான கல்வியை தரப்போகிறதாக கூறுகிறார். நீட்டிற்கு இப்படித் தான் விளக்கம் கொடுத்தார்கள், தரமான மருத்துவர்களை உருவாக்கப் போகிறோம் என்று, தரமான மருத்தவர்கள் தான் இப்போது தேர்வெழுதி உள்ளே (சிறைக்கு) போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆள் மாறாட்ட மோசடிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உலக சுகாதார நிறுவனத்தில் 2018இல் ஒரு கணக்கெடுப்பு நடத்தி கூறியிருக்கிறார்கள் அதில், ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் என்பதுதான் தர நிர்ணயம். அதைத் தாண்டி பல மாநிலங்கள், பல நாடுகள் இருக்கின்றன. இந்தியாவில் முதலில் இருப்பது தமிழ்நாடு, இங்கு 253 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். இது எதற்கு இணையானது என்றால் நார்வே, ஸ்வீடனுக்கு இணையானது. இந்த நாடுகளில் முறையே 100 க்கு 4.3, 4.2 என்ற அளவில் மருத்துவர்கள் இருக்கிறார்கள். டெல்லியிலேயே 1000 பேருக்கு 3 மருத்துவர்கள் தான் இருக்கிறார்கள்.

அப்போது இந்த மருத்துவத்தை தரமான கல்வி இல்லாமலா படித்தோம்? எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி அரசு தரமான மருத்துவம் கொடுக்கிறது. அதில் படித்த எத்தனை பேர் இந்தியாவில் வேலை பார்க்கிறார்கள்? அய்.அய்.டி.யில் படித்த எத்தனை பேர் இந்தியாவில் இருக்கிறார்கள்? நம்ம வரிப் பணத்தில் படித்துவிட்டு வெளிநாட்டிற்கு சென்று விட்டார்கள். ஆனால் தமிழ்நாட்டு கல்விக் கொள்கை சொன்னது, இங்கே நீ ‘எம்.எஸ்.’ பட்ட மருத்துவ மேல் படிப்புப் படிக்க வேண்டுமென்றால், இலவசமாகப் படி. ஆனால் கிராமத்தில் மூன்று வருடம் வேலை செய்து விட்டு வா இலவசமாக படிக்கலாம் என்றது. அதில் ஒரு ஒப்பந்தத்துடன், ‘எம்.எஸ்.’ அல்லது ‘எம்.டி.’ முடித்தவுடன் 5 வருடம் இங்கே வேலை பார்க்க வேண்டும் அல்லது 45 லட்சம் ரூபாய் பணம் கட்ட வேண்டும் என்ற ஒப்பத்தத்துடன் மருத்துவக் கல்வி நடைமுறையை உருவாக்கி வைத்துள்ளோம். இதனால் மருத்துவர்கள் கிடைக்கிறார்கள். இதே நிபந்தனையுடன் உயராய்விற்குப் போகிறவர்களும் படிக்கிறார்கள் அதனால் மருத்துவ பேராசிரியர்கள் கிடைக்கிறார்கள். எங்கள் கல்விக் கொள்கையினால் இப்போது என்ன கெட்டு விட்டோம்? பா.ஜ.க.காரர்கள் மிகவும் விசித்திரமானவர்கள். மோடி என்ன படித்தார் என்பது இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 2017ஆம் ஆண்டு ஒரு சான்றிதழை கொடுத்தார்கள் மோடி 1978ஆம் ஆண்டு டெல்லி யுனிவர்சிட்டியில் படித்துள்ளார் என்று. அந்த சான்றிதழ் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. 78ஆம் ஆண்டு எப்படி கணினி தட்டச்சு செய்ய முடியும்? மாட்டிக் கொண்டார்கள். நமக்கு ஒரு கல்வி அமைச்சர் இருந்தார். மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர் என்ன படித்தார் என்பதும் கண்டுபிடிக்க முடியவில்லை.


நமது கல்வியமைச்சர் செங்கோட்டையனைப் பார்த்து 12ஆவது படித்தவர் கல்வியமைச்சரா என்று கிண்டலாக கேட்டார்கள். ஸ்மிருதி இரானி என்ன படித்தார் என்று பா.ஜ.க.காரர்களிடம் கேளுங்கள் யாராவது சொல்கிறார்களா பார்ப்போம். இப்போது தான் சொல்கிறார்கள் தொலைதூரக் கல்வியில் விண்ணப்பம் போட்டிருக்கிறார் என்று. மனிதவள மேம்பாட்டுத் துறை ஒரு பட்டியல் எடுத்திருக்

4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இராசிபுரத்தில் கழகம் நடத்திய பெரியாரியல் பயிலரங்கம்

திராவிடர் விடுதலைக் கழகம் இராசிபுரம் சார்பில் 10.11.2019 அன்று காலை 10 மணியளவில் இராசிபுரம் பட்டணம் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சுமதி மதிவதனி வரவேற்புரையாற்றினார். இராசிபுர நகர அமைப்பாளர் பிடல் சேகுவேரா தலைமை வகிக்க, நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன் முன்னிலை வகித்தார். மேலும் நிகழ்வில், பொன். நல்லதம்பி (தி.மு.க பேரூர் செயலாளர்), சுந்தரம் (அ.தி.மு.க முன்னாள் நகர கூட்டுறவு வங்கி இயக்குனர்), இரத்தினம் (வழக்கறிஞர் உயர்நீதிமன்றம் மதுரை), மோகன் தாஸ் (தி.மு.க மாவட்ட மாணவரணி அமைப்பாளர்), கைலாஷ் (இராசிபுரம் ஒன்றிய செயலாளர் ம.தி.மு.க.) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.



காலை அமர்வில், 'பெரியார்-அம்பேத்கர் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். உணவு இடைவேளைக்கு பின், 'இட ஒதுக்கீடு மற்றும் சட்ட எரிப்பு போராட்ட வரலாறு' குறித்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் உரையாற்றினார்.

பயிலரங்கத்தின் இறுதியில் புதிய தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, கழகத் தலைவர் மற்றும் பரப்புரைச் செயலாளர் இருவரும் பதில் அளித்தனர். மதிய உணவாக மாட்டுக் கறி வழங்கப்பட்டது. மதிய உணவிற்கான செலவை சேந்தமங்கலம் சிவக்குமார் ஏற்றுக் கொண்டார்.

பயிலரங்கத்தில் 45க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். பங்கேற்றவர்களுக்கு கழகத் தலைவர் சான்றிதழ்களை வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டவர்களுக்கும், தோழமை அமைப்பின் நிர்வாகிகளுக்கும், கழக நிகழ்ச்சிகளுக்கு தொடர்ந்து உதவி புரிந்து வருபவர்களுக்கும் கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசுகளை கழகத் தலைவர் வழங்கினார். ஆத்தூர் மகேந்திரன், சென்னிமலை செல்வராசு ஆகியோர் பயிலரங்கத்திற்கு புதிய தோழர்கள் பலரை அழைத்து வந்திருந்தனர். நிகழ்விற்கு மல்லசமுத்திர ஒன்றிய அமைப்பாளர் பெரியண்ணன் நன்றி கூறினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள் அது என்னவென்றால், இந்தியாவில் சிறந்த நூறு பல்கலைக் கழகங்கள், சிறந்த நூறு பொறியியல் கல்லூரிகள், சிறந்த நூறு மருத்துவ கல்லூரிகள், சிறந்த கலைக் கல்லூரிகள் எவை என்று. இந்தியாவின் சிறந்த நூறு பல்கலைக் கழகங்களில் தமிழகத்தில் மட்டும் 24 பல்கலைக் கழகங்கள் என்று பட்டியல் போட்டது.

**சிறந்த நூறு கல்லூரிகளில் 37 தமிழ்நாட்டில் உள்ளது. சிறந்த பொறியியல் கல்லூரிகளில் 22 கல்லூரிகள் தமிழ்நாட்டைச் சார்ந்தவை. மோடியின் ஒளிரும் குஜராத்தில் இரண்டு கல்லூரிகள் தான் உள்ளது. இவர்கள் தான் நமக்கு தரமான கல்வியை கொடுக்கப் போகிறார்களாம்.** இந்தக் கல்விக் கொள்கையில், Gross Enrolment Ratio என்று ஒன்று உள்ளது. அதாவது 18 முதல் 23 வயது உள்ளவர்களில் எத்தனை பேர் உயர்கல்வி படிக்கிறார்கள் என்பது தான் அந்த சதவீதம். இந்தியாவின் சராசரி 25.2 தான். இதை 2035-ற்குள் 50 சதவீதம் உயர்த்தப் போகிறோம் என்று கல்விக் கொள்கையில் கூறியிருக்கிறார்கள். இதற்கு என்ன தீர்வாக சொல்கிறார்களென்றால், 50 சதவீதம் எட்ட 50000 ஆக இருக்கும் கல்லூரிகளை மூடிவிட்டு 12 ஆயிரமாக குறைத்து மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போகிறார்களாம். இதை எங்காவது நம்ப முடியுமா? சரி நாம் சொல்கிறோம் என்றால், தமிழ்நாட்டின் Gross Enrollment Ratio மனிதவள மேம்பாட்டுத் துறை 2017 கணக்குப்படி 47 சதவீதம் உள்ளது தமிழ்நாட்டில். இப்போதே நாங்கள் 47 சதவீதம் இருக்கும் போது எங்களுக்கு எதற்கு உன் கல்விக் கொள்கை? நீ 2035இல் வைத்துள்ள இலக்கை நாங்கள் 2020இல் எட்டிவிடுவோம் எங்களுக்கு உன் கல்விக் கொள்கை தேவையில்லை.

தேர்வு முறைகளைப் பற்றி அப்போது, லட்சுமணசாமி முதலியார் தலைமையிலான உயர்கல்விக்கான குழு (அவர் 30 ஆண்டுகளாக துணை வேந்தராக இருந்தவர்) கேள்வித் தாள்கள் யாவும் விளக்கமான விடைக் கூறுமாறு இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். அதைத்தான் நாமும் சொல்கிறோம், அனிதா வாங்கிய மதிப்பெண் என்ன? 1176 என்று சொல்லக்கூடாது. இயற்பியல், வேதியியல், உயிரியலில் 600 க்கு 593 மதிப்பெண் வாங்கிய அனிதா ஏன் 'நீட்'டில் 720 க்கு 107 மதிப்பெண் வாங்க முடியவில்லை? அப்போது மாணவியின் அறிவில் குறையா? உன் தேர்வு முறையில் குறையா? இது தான் தரமான கல்வியா?


இனிமேல் பட்டப்படிப்பிற்கு, பொறியியல் படிப்பிற்கு, சட்டப் படிப்பிற்குக்கூட அகில இந்திய தேர்வு எழுத வேண்டும்.

தமிழ்நாட்டு மாணவர்கள் அரியானாவில் தேர்வு எழுத வேண்டும். இப்படிப்பட்ட தேர்வு முறையை இந்த கல்விக் கொள்கை பரிந்துரைக்கிறது. சரி வேலை வாய்ப்புகளுக்கு எங்களுக்கு என்ன செய்துள்ளாய்? மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருக்கிறது. ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் தான் கேள்வித் தாள் இருக்கும். வட இந்தியர்கள் தாய் மொழியில் எழுதுவார்கள் நாங்கள் அந்நிய மொழியில் எழுதணும். ஏன் ஆங்கிலத்தில் எழுதலாமே என்று கேட்கலாம், 2014இல் மோடி ஆட்சிக்கு வந்தவுடன், இதை மாற்றி விட்டார். மத்திய அரசுப் பணி தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) ஆங்கிலத் திறன் அறிவுக்கு ஒரு தேர்வை வைத்திருந்தது. 100க்கு 25 மதிப்பெண்; 150க்கு 37 மதிப்பெண் பெற்றால் போதும் வடநாட்டு மாணவர்கள் ஆங்கிலத் தேர்வு கூடாது என்று போராடினார்கள்.

மோடி அதற்கு ஒரு உறுதிமொழி கொடுத்தார் இன்று வரை பின்பற்றுகிறார், என்னவென்றால், ஆங்கிலத்தில் எழுதுங்கள் ஆனால் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று. அதாவது IAS,IPS, IFS ஆகப் போகிறவர்களுக்கு கூட ஆங்கிலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்று. ஆனால் தமிழ்நாட்டில் வருமான வரித் துறையில் எழுத்தராகப் போகிறவர்கள்கூட ஆங்கிலத்தில் தேர்வு எழுத வேண்டுமாம். அதனால் தான் மாநில மொழிகளிலும் மாநில அளவிலும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதை நாம் மய்ய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம், தமிழ்நாடு அரசு தேர்வுகளில் ஒரு திருத்தத்தை 2016 நவம்பர் 7இல் கொண்டுவருகிறார்கள். விண்ணப்பிப்பவர்கள், இந்திய குடிமகனாக இருக்க வேண்டும், நேபாள், பூடானை சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம், தமிழ் தெரியாமல் இருந்தாலும் பணியில் சேர்ந்து இரண்டாண்டுகளில் தமிழில் தேர்ச்சி பெறலாம் என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இப்போது மின்வாரியத்தில் வெளிமாநிலத்தைச் சேர்ந்த 36 பேர் பணியில் சேர்ந்துவிட்டார்கள். அதேபோல் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பொதுப் போட்டியில் 78 சதவீதம் பேர் வெளி மாநிலத்தை சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வேறு காரணத்தால் இந்த தேர்வை இரத்து செய்துவிட்டார்கள். இப்படி எல்லா விதத்திலும் நம்மை புறக்கணிக்கிறார்கள். அதனால் மீண்டும் பெரியார் தேவைப்படுகிறார். மீண்டும் பெரியார் எழுப்பிய முழக்கம் தேவைப்படுகிறது. ஜாதி ஒழிப்பு (பெண்ணடிமைத்தனம் இரண்டும் ஒன்று தான்), உயிரினும் மேலான தனித் தமிழ்நாடு இவை இரண்டையும் நினைவு படுத்தி விடைபெறுகிறேன்.

## பி.எஸ்.கிருஷ்ணன் முடிவெய்தினார்




வன்கொடுமை தடுப்புச் சட்டம், மண்டல் கமிஷன் அறிக்கையை செயல்படுத்தியது ஆகிய பணிகளில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் அய்.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ்.கிருஷ்ணன் டெல்லியில் முடிவெய்தினார். அவருக்கு வயது 86.

கேரளாவில் 1932 டிசம்பர் 30ஆம் தேதி பிறந்தவர் பி.எஸ்.கிருஷ்ணன். 1956இல் அய்.ஏ.எஸ். அதிகாரியாக தேர்வான அவர், ஆந்திராவிலும், மத்திய அரசிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்தவர். எஸ்.சி. பிரிவினருக்கு சிறப்புக்கூறு திட்டம், எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டம், மண்டல் கமிஷன் அறிக்கை அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட் டோருக்கு இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது போன்ற செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகித்தவர். 1990இல் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும், மத்திய அரசின் கொள்கை உருவாக்க குழுக்களில் பொறுப்பாளராக பணியாற்றினார். தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர், தேசிய எஸ்.சி., எஸ்.டி. ஆணைய உறுப்பினர், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கவுரவ ஆலோசகர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்துள்ளார். 'நீதிபதி கிருஷ்ணய்யர் விருது' உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

ஒடுக்கப்பட்ட உரிமைகளுக்காக தனது பதவிக் காலம் முழுதும் பாடுபட்டதோடு ஓய்வுக்குப் பிறகும் சமூக நீதிக்காகக் குரல் கொடுத்தார். மண்டல் ஆணையத்தின் செயலாளராகப் பொறுப்பேற்று வரலாற்று சிறப்பு மிக்க அந்த ஆவணத்தை எழுதியதில் முக்கியப் பங்காற்றியவர் பி.எஸ்.கிருஷ்ணன். சமீபகாலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு, டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் 9.11.2019 அன்று முடிவெய்தினார்.

திராவிடர் விடுதலைக் கழகம், சமூக நீதிப் போராளிக்கு வீர வணக்கம் செலுத்துகிறது.

## இயக்குநர் அருண்மொழி காலமானார்



நடிப்பு, நாடகம், இயக்கம், திரைக்கதை, ஆவணப்படம், திரைமொழி கற்பித்தல் ஆகியவற்றில் தனித்து விளங்கிய இயக்குநர் அருண்மொழி (49) மாரடைப்பால் 9.11.2019 அன்று முடிவெய்தினார்.

பூனாவில் திரைப்படக் கல்லூரியில் திரைப்பட இயக்கம் பயின்றவர் அருண்மொழி. சென்னை திரும்பியவுடன் 'அவள் அப்படித்தான்' (1979) திரைப்படத்தில் ருத்ரய்யாவிடம் இணை இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் 'ஏழாவது மனிதன்' (1982) படத்தில் இயக்குநர் ஹரிஹரனிடம் பணியாற்றினார். அப்படத்துக்கு வசனமும் எழுதினார். அதன் பின்னர் அவரே, நாசர், கலைராணி ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்க, 'காணிநிலம்' (1987) 'ஏர்முனை' (1992) ஆகிய திரைப்படங்களை இயக்கினார். இயக்குநர் அருண்மொழியின் திரைப்படங்கள் சர்வதேச திரைப்படவிழாக்களில் அயல்நாடுகளில் திரையிடப்பட்டன.

அருண்மொழி, நிறைய வாய்ப்புகள் வந்தபோதும் தமிழ்த் திரைப்படத் துறையில் வணிகத் திரைப்பட இயக்குநராக செயல்பட மனமின்றி இயங்கி வந்தார். எனினும் திரைப்படத் துறைக்கு ஆர்வத்தோடு வரும் இளைஞர்கள் பலருக்கும் திரைப்படத்தைச் சொல்லிக் கொடுப்பதில் மிகுந்த அக்கறைக் காட்டினார். தாமிரபரணி மாஞ்சோலை தொழிலாளர்கள் துப்பாக்கிச் சூடு படுகொலை வழக்கு விசாரணை குறித்த Beware of Commissions : 1998 சிறுதுளி, நிலமோசடி, தோழி ஆகிய ஆவணப்படங்களை இயக்கினார். மேலும், மக்கள் கவிஞர் இன்குலாப், கோவை ஞானி, ராஜம் கிருஷ்ணன், சாமிநாத ஆத்ரைய்யா, புரிசை கண்ணப்ப தம்பிரான், சிற்பி தட்சிணாமூர்த்தி, கி.ராஜநாராயணன், இசைவானில் இன்னொன்று (இளையராஜா) உள்ளிட்ட பிரபலங்கள் குறித்த ஆவணப் படங்களையும் அருண்மொழி இயக்கியது குறிப்பிடத்தக்கது.

அருண்மொழி தனிமனிதரல்ல, எந்தவித இலாபநோக்கமுமின்றி ஒரு இயக்கமாகச் செயல்பட்டவர். திரைப்படம் சார்ந்த விவாதங்கள், பட்டறைகள், குறும்பட முகாம்கள், இலக்கியக் கூட்டங்கள், சர்வதேசத் திரையிடல்கள், கலைநிகழ்ச்சிகள் பலவற்றிலும் அவரைக் காணமுடியும். கையில் ஒரு கேமராவுடன் முக்கிய ஆளுமைகளைப் போகிற போக்கில் படம்பிடித்து அவற்றை ஆவணப்படுத்தினார்.

2010க்குப் பிறகு பிரசாத் ஸ்டுடியோ நடத்திவந்த திரைப்படக் கல்லூரியில் பணியாற்றினார். சமீப ஆண்டுகளில் அருண்மொழி, நடிப்புப் பயிற்சிக்கென்று சொந்தமாகவே நடிப்புப் பள்ளி தொடங்கி திரைப்படப் பயிற்சிக் கூடத்தைத் தொடங்கினார். கடந்த 20 ஆண்டுகளில் அவரிடம் பயின்ற மாணவர்கள் திரைப்படத் துறையிலும், ஊடகங்களிலும் சிறப்பான பங்களிப்புகளைச் செய்து வருகின்றனர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இயக்குனர் அருண்மொழிக்கு இறுதி மரியாதை செலுத்தினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 14th November 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN